நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு சுற்றுப்பயணம்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, பிப். 22 -

'நாடாளுமன்றத் தேர்தல் - 2024 - நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு திருவண்ணாமலையில் சுற்றுப் பயணம் குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க. சார்பில், நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி, ஆரணி நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட பகுதிகளுக்கு வருகை தந்து, பொதுமக்கள், வியாபாரிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் பரிந்துரைகளை, தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் சந்தித்து பெறவுள்ளனர்.

தமிழ்நாடுமுதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி, ஆரணிநாடாளுமன்றத் தொகுதிகளின் பரிந்துரைகளை நேரில் சந்தித்து பெறுவதற்காக, நாளை (பிப்ரவரி 23ம் தேதி - வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு, ஆரணிநகரம், சேவூர் பைபாஸ் சாலையில்உள்ள ராஜ் பிரியா திருமணமண்டபத்தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தலைமையில் வருகைத்தர உள்ளார்கள்.

அதுசமயம், திருவண்ணாமலை, ஆரணிநாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்டமாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள்தேர்தல் அறிக்கை தயாரிக்கும்குழுவினருடன் தொடர்புகொண்டு, நமது மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழுவினரை சந்திப்பற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்கவேண்டுமெனகேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் வார் ரூமை தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன், கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் இணைந்து திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், தினேஷ், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே. சரவணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.குபேர் இளம்பரிதி, தலைவர் நாகராஜன், துணைத்தலைவர் அழகர்சாமி, துணை அமைப்பாளர்கள் பிரபு, மகேந்திர குமார், வெயில் முத்து, விநாயக மூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், அயலக அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.பி.அசோக், அயலக அணி துணை அமைப்பாளர் என்.எஸ்.கிறிஸ்டோபர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அபிராமி நாதன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'எல்லோருக்கும் எல்லாம்' எனும் 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் முதல்வர் - கழகத் தலைவரின் பிறந்த நாளை

கழக வழக்கறிஞர் அணி சார்பில் - நீதிமன்றங்கள்தோறும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடந்த - மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 22 -

கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், 'எல்லோருக்கும் எல்லாம்' எனும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் - கழகத் தலைவரின் பிறந்த நாளை, கழக வழக்கறிஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாவட்டங்களிலும், வெளிமாநிலங்களிலும் மற்றும் நீதிமன்றம் தோறும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!" எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (20.2.2024) காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக சட்டத்துறை அலுவலகத்தில் சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ஈரோடு ராதாகிருஷ்ணன், இரா.தாமரைச்செல்வன் - துணைச் செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு, வி.வைத்தியலிங்கம் - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், கவி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச்1 அன்று கழக வழக்கறிஞர் அணியின் சார்பில் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாவட்டங்களிலும், வெளிமாநிலங்களிலும் மற்றும் நீதிமன்றம் தோறும் சிறப்பாக கொண்டாடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்களுக்கு தேர்தல் பணிகளில் உதவிடும் வகையில் தி.மு.க. வழக்கறிஞர் அணியின் சார்பில் கழக மாவட்டங்கள் தோறும் "வார் ரூம்"அமைப்பதற்கு உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கும் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்தக் கூட்டம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

வெற்றியை நோக்கிய நம் பயணம்!

"#Election2024 வெற்றியை நோக்கிய நம் பயணத்தில் அடுத்த நூறு நாட்களும் மிக முக்கியமானவை. கடமையுணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்; #INDIAவை வெற்றி பெறச் செய்வோம்!" என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் நேற்று சமூகவலைதளத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி, கழக வழக்கறிஞர் அணியினர் "இந்தியா கூட்டணி" வேட்பாளர்கள் அனைவரையும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிடும் வகையில், தங்களுடைய பணிகளை கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., தலைமையில் முழுமூச்சுடன் சிறப்பாக பணியாற்றுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத்தின் இரத்த நாளங்களாகச் செயல்படும் இளைஞர் அணியின் செயலாளர் பொறுப்பு ஏற்ற நாள் முதல், தனது முத்திரை பதிக்கும் விதமாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதுடன், அதற்கு முத்தாய்ப்பாக கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டில் எட்டு இலட்சத்திற்கும் மேலான இளைஞர்களை கலந்து கொள்ளச் செய்து, கழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த கூட்டம் மனதார பாராட்டி வாழ்த்துகிறது.

தமிழ்நாட்டை பொருளாதார வளர்ச்சி அடைந்த முதல் மாநிலமாக ஆக்கிட, அல்லும் பகலும் அயராது உழைத்து வருவதோடு, அதன் ஒரு பகுதியாக ஸ்பெயின் நாட்டிற்கு பத்து நாள் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்து, வெற்றிப்பயணமாக முடித்து தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் மனதாரப் பாராட்டி, வாழ்த்துகிறது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக "கேலோ இந்தியா" விளையாட்டை இந்திய மாநிலங்களே வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் நடத்தி, அப்போட்டியில், வரலாற்றில் இல்லாத அளவிற்கு அகில இந்திய அளவில் தமிழ்நாட்டை இரண்டாவது இடத்திற்கு உயர்த்தி, இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டை உயர்த்தி காட்டியுள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த கூட்டம் மனதார பாராட்டி வாழ்த்துகிறது.

திராவிட மாடல் கிரீடத்தில் மற்றொரு வைரக்கல்!

அல்லும் பகலும் அயராது நேர்மையான ஆட்சி நடத்தி வரும், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஆட்சியில், எதிர்த்தரப்பினரும் குற்றம் குறை சொல்ல முடியாத அளவிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் சிவில் நீதிபதிகள் தேர்வு நடத்தி, அத்தேர்வில் தமிழ்நாட்டில் ஏழையெளிய மற்றும் மிகவும் பின் தங்கிய குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் சிவில் நீதிபதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றவிருக்கின்ற நிலையில், குறிப்பாக, தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மலைக் கிராமத்தில் வசித்து வரும் மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதி எனும் மகளிரும் - அதைப் போலவே, பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த விளிம்பு நிலை குடும்ப பின்னணியைக் கொண்ட தமிழ் வழியில் பயின்ற முதல் தலைமுறைப் பட்டதாரிகள், இச்சிவில் நீதிபதிகள் தேர்வில் வெற்றி பெற்று நீதிபதிகளாக பொறுப்பேற்று மக்களுக்கு பணியாற்றிட இருப்பது, "எல்லோருக்கும் எல்லாம்" என்றும், "சொல்வதைச் செய்வோம், சொல்லாததைச் செய்வோம்" என்ற தாரக மந்திரங்களுடன், வறிய மக்களுக்காகவும் பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் "திராவிட மாடல்" ஆட்சியின் கிரீடத்தில் பதிக்கப்பட்ட மற்றொரு வைரக் கல் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு, மக்களுக்காக சிந்தித்து, மக்களுக்காகப் பணியாற்றி, தமிழ்நாட்டு மக்கள் வாழ்வை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் மேம்படுத்தி வரும் "திராவிட மாடல் ஆட்சி நாயகன்" தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகாரபூர்வமற்ற அணிகளாக செயல்பட்டு வரும் அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ., ஆகியவற்றின் செயல்பாடுகளை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிட இயக்கக் கோட் பாடுகளைக் கொண்ட, 'எல்லோருக்கும் எல்லாமுமான', கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு அளிக்கும் மிகச் சிறந்த 2024-2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசு தாக்கல் செய்திருக்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கு நிதிஒதுக்கீடு செய்வதில் வஞ்சிக்கின்ற நிலையிலும் மிக நிதி நெருக்கடியான இக்கால கட்டத்தில், எதிர்த் தரப்பினரே பாராட்டும் வண்ணம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையை செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் - நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தான் வகித்து வரும் பொறுப்புணர்ந்து பணியாற்றாமல், அரசியலமைப்புச் சட்டம் வகுத்த வழியின்படி நடக்காமல், எதேச்சாதிகாரத்துடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, நடைபெற்று வரும் தமிழ்நாட்டு பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை அவமதித்து வெளியேறிய ஆளுநர் அவர்களின் இச்செயலை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன்,

நம் உயிரனைய "தமிழ்த் தாய் வாழ்த்து"ப் பாடலை, கழகத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, கழக நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்படும் என்று அறிவித்துள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானம்

கழகம் துவக்கப்பட்ட போது, தலைமைக் கழக அலுவலகமாகச் செயல்பட்டு வந்த சென்னை, இராயபுரம், அறிவகத்தில் தொடங்கி, அரசினர் தோட்ட சட்டமன்ற அலுவலகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் என அனைத்து கழகத்தின் தலைமை அலுவலகத்திலும் பணியாற்றி, தமிழ்நாடு முழுவதும் உள்ள கழக முன்னோடிகள், நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவராலும் அறியப்பட்டவரும் - முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் எண்ணங்களை செயலாக்கி, அவர்களின் பேரன்பைப் பெற்றவருமான தலைமைக் கழக துணை மேலாளர் என். ஜெயக்குமார் அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வரும்

தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்கு - அமைப்பிற்கு தமிழ்நாடு அரசு விருது!

தமிழ் வளர்ச்சி - செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்குகிறார்!

சென்னை, பிப். 22 -

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வரும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்கும், அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர் தம் தமிழ்த்தொண்டுக்குப் பெருமை செய்து வருகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதனால் 2022ஆம் ஆண்டிற்கான விருதுகளை திருவாடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலை அரங்கத்தில் (முத்தமிழ் பேரவை மன்றம்) இன்று மாலை 5.00 மணியளவில் வழங்கப்பட உள்ளது.

அவ்விருதுகள் பின்வருமாறு.

தமிழ்த்தாய் விருது

திருப்பூர் தமிழ்ச்சங்கம், கபிலர் விருது - முனைவர் அமிர்த கௌரி (வயது - 77, சென்னை மாவட்டம்), உ.வே.சா விருது நாரும் பூநாதன் (வயது - 64, திருநெல்வேலி மாவட்டம்), கம்பர் விருது மா.இராமலிங்கம் (வயது - 74, சென்னை மாவட்டம்), சொல்லின் செல்வர் விருது முனைவர் தி.இராசகோபாலன் (வயது - 84, சென்னை மாவட்டம்), உமறுப்புலவர் விருது முனைவர் பீ.மு.அஜ்மல்கான் (வயது - 73, மதுரை மாவட்டம்), இளங்கோவடிகள் விருது கூ.வ. எழிலரசு (வயது - 71, காஞ்சிபுரம் மாவட்டம்), அம்மா இலக்கிய விருது திருமதி தி.பவளசங்கரி (வயது - 65, ஈரோடு மாவட்டம்), சிங்காரவேலர் விருது நா.சு.சிதம்பரம் (வயது - 77, சென்னை மாவட்டம்), அயோத்திதாசப் பண்டிதர் விருது வை.தேசிங்குராசன் (வயது - 64, பெரம்பலூர் மாவட்டம்), மறைமலையடிகளார் விருது மருத்துவர் சு.நரேந்திரன் (வயது - 81, தஞ்சாவூர் மாவட்டம்), அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது முனைவர் ப.சரவணன் (வயது - 50, சென்னை மாவட்டம்), காரைக்கால் அம்மையார் விருது - முனைவர் த. வசந்தாள் (வயது - 64, சென்னை மாவட்டம்), சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது - முல்லைச்சரம் இதழ் (ஆசிரியர் கவிஞர் பொன்னடியான்), ஜி.யு. போப் விருது முனைவர் அமுதன் அடிகள் (வயது - 80, திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

சிறந்த மொழிப்பெயர்ப்பாளர்

2022ஆம் ஆண்டுக்குரிய பத்து விருதாளர்களான

சிவா பிள்ளை கணபதிப்பிள்ளை என்கிற சிவகுரு நாதபிள்ளை (வயது - 81, இலண்டன்)

பி.எஸ்.வி.குமாரசாமி (வயது 65, மும்பை)

பேராசிரியர் முனைவர் ப.சந்திரசேகரன் (வயது - 69, புதுக்கோட்டை மாவட்டம்)

சுப்ரபாரதிமணியன் (வயது - 68, திருப்பூர் மாவட்டம்)

அ.ஸ்டீபன் அருள்ராஜ் (வயது - 40, திருச்சி மாவட்டம்)

கவிஞர் அரு.சோமசுந்தரம் மறைவு (வயது - 87, சிவகங்கை மாவட்டம்)

கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு (வயது - 69, சென்னை மாவட்டம்)

முதுமுனைவர் ஆ.இராசமாணிக்கம் (வயது - 86, நாமக்கல் மாவட்டம்)

கே.தட்சிணமூர்த்தி (வயது - 61, திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

புலவர் தி.வே.விஜயலட்சுமி (வயது - 73, சென்னை மாவட்டம்)

தமிழ்ச்செம்மல் விருது 2022ஆம் ஆண்டுக்கான 38 விருதாளர்கள்

அரியலூர் மாவட்டம் ப.முத்துக்குமரன் (வயது - 92), இராணிப்பேட்டை மாவட்டம் முனைவர் பெ.தமிழ்ச்செல்வி குணசேகரன் (வயது - 59), இராமநாதபுரம் மாவட்டம் செ. மாணிக்கவாசகம் (வயது - 65), ஈரோடு மாவட்டம் நாமக்கல் நாதன் (வயது - 74), கடலூர் மாவட்டம் கவிகை சா.கணேசன் (வயது - 66) கரூர் மாவட்டம் நன்செய்ப்புகழூர் அழகரசன் (வயது - 82), கள்ளக்குறிச்சி மாவட்டம் மா.முத்தமிழ் முத்தன் (வயது - 77), கன்னியாகுமரி மாவட்டம் புலவர் வே.இராமசுவாமி (வயது 80), காஞ்சிபுரம் மாவட்டம் சு.ராஜேஸ்வரன் (வயது - 76), கிருட்டின கிரி மாவட்டம் முனைவர் கு.வணங்காமுடி (வயது - 71), கோயம்புத்தூர் மாவட்டம் சொ.க. முருகன் (எ) கவிஞர் அழகு சக்திகுமரன் (வயது - 75) சிவகங்கை மாவட்டம் ஆறு.மெ.ஆண்டவன் (வயது - 76), செங்கல்பட்டு மாவட்டம் மோசசு மைக்கேல் பாரடே (வயது - 67), சென்னை மாவட்டம் புலவர் ப.கி.பொன்னுசாமி (வயது - 92), சேலம் மாவட்டம் க. இராசமாணிக்கம் (எ) கவிதை தாதை உபதேசி (வயது - 84), தஞ்சாவூர் மாவட்டம் ரா.சிவகுமார் (வயது 72), தருமபுரி மாவட்டம் புலவர் க.தீயாகசீலன் (வயது - 82), திண்டுக்கல் மாவட்டம் து.இராசகோபால் (வயது - 82), திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவை.சிவம் என்கிற சிவராமலிங்கம் (வயது - 77), திருநெல்வேலி மாவட்டம் ஜா.பீட்டர் மைக்கேல் ராஜ் (வயது - 42), திருப்பத்தூர் மாவட்டம் கவிஞாயிறு பெரும்புலவர் துரை.கருணாகரன் (வயது - 68), திருப்பூர் மாவட்டம் கவிஞர் க. குமாரசாமி (வயது - 76), திருவண்ணாமலை மாவட்டம் எஸ்.சையத் இஸ்மாயில் (வயது - 55), திருவள்ளூர் மாவட்டம் தி.தாயுமானவன் (வயது - 71), திருவாரூர் மாவட்டம் சு.கந்தசாமி (வயது - 76), தூத்துக்குடி மாவட்டம் கா.உதயசங்கர் (வயது - 63), தென்காசி மாவட்டம் மருத்துவர் ஜ.பத்மானந்தன் (வயது 65), தேனி மாவட்டம் திருமதி சு.புவனேஸ்வரி (வயது - 76), நாகப்பட்டினம் மாவட்டம் புலவர் கணேச.இராஜேந்திரன் (வயது - 74), நாமக்கல் மாவட்டம் அ.செ.பரணிராஜா (வயது - 80), நீலகிரி மாவட்டம் கோ.ம.பெள்ளி (வயது - 77), புதுக்கோட்டை மாவட்டம் நெ.இராமச்சந்திரன் (எ).இரா.சந்திரன் (வயது - 53), பெரம்பலூர் மாவட்டம் வே.இளங்கோவன் (வயது 75), மதுரை மாவட்டம் கவிஞர் இரா.இரவி (வயது - 57), மயிலாடுதுறை மாவட்டம் இரெ.கங்கை மணிமாறன் (வயது - 65), விருதுநகர் மாவட்டம் திருமதி கி.இராமதிலகம் (வயது - 69), விழுப்புரம் மாவட்டம் பு. அறிவுடைநம்பி (நயம்பு. அறிவுடைநம்பி) (வயது - 79), வேலூர் மாவட்டம் ஆ. முனி ரத்தினம் (வயது - 87).

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதனால் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன் முன்னிலையில் திருவாடுதுறை டி.என். ராஜரத்தினம் கலை அரங்கத்தில் (முத்தமிழ்ப் பேரவை மன்றம்) இன்று (22.02.2024 - வியாழக் கிழமை) மாலை 5.00மணியளவில் விருதுகள் வழங்கப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை அருள் மற்றும், அரசு உயர் அலுவலர்கள், தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள் / பணியாளர்கள், தமிழறிஞர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

வரும் 24.02.2024 சனிக்கிழமை மாலை 04.00 மணி அளவில் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட கழக அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) கூட்டம் நடைபெறும்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள்: 1.தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா.
2. BLA 2, BLC பணிகள் குறித்து.
3. கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் ஆர்.காந்தி
செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.

தி.மு.க. தொழிலாளர் அணி

மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (23-2-2024- வெள்ளிக்கிழமை), காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள், நாடாளுமன்றத் தேர்தல் குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 20.02.2024

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி